**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஒ.எஸ்.எண்.66/2020** **நாள். 21.07.2026**

2026–ம் ஆண்டு ஜுலை திங்கள் 21–ம் நாள் பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பி.வா.சா.2 குழந்தைவேல் த/பெ.ஆறுமுகம்**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வாதி எனக்கு உறவினர் இல்லை. பிரதிவாதியும் எனக்கு உறவினர் இல்லை. பிரதிவாதியை 20 வருடங்களுக்கு மேலேயே எனக்கு தெரியும். வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். பிரதிவாதி எதற்காக கடன் பெற்றார் என்று வாதி சொல்லியுள்ளார் என்று தெரியுமா என்றால், பிரதிவாதி வைத்திய செலவிற்காக கடன் வாங்கியதாக கூறியுள்ளார். வாதியிடம் பிரதிவாதி கடன் வாங்கினாரா என்றால் இல்லை. பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட்டை நான் கையெழுத்து வாங்கும் போது பார்த்துள்ளேன். நான் புரோநோட்டில் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. நான் தாக்கல்செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன்.

2) உழவன் விவசாய சங்கம் என்பது விவசாயிகளுக்கு உரம் மட்டும் விற்பனை செய்யும் சங்கம் என்றால், உரமும் விற்பனை செய்வார்கள். கடனும் கொடுப்பார்கள். மேற்படி உழவன் விவசாய சங்கத்தில் 50திலிருந்து 100 நபர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். நான் மேற்படி உழவன் விவசாய சங்கத்தில் உறுப்பினர் இல்லை. பிரதிவாதி உழவன் விவசாய சங்கத்தில் கடன் வாங்கிய சமயத்தில் நான் அங்கு இருந்தேன். மேற்படி உழவன் விவசாய சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கமா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியும், அவரது மகனும்அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தினார்கள். அந்த

சங்கத்தில் தான் வட்டி செலுத்தினார்கள். மேற்படி கடனுக்கு வட்டி செலுத்தியதற்கான இரசீது வைத்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதியும், அவரது மகனும் கடன் வாங்கும் சமயத்தில் நான் அங்கிருந்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. 2020ம் வருடம் மார்ச் மாதம் 2ம் வாரத்தில் பைசல் பேசினேன். பைசல் பேசிய சமயம் நான் இருந்தேன். என்னுடன் பி.கே.கந்தசாமி என்பவர் பைசல் பேசிய சமயம் உடன் இருந்தார். நாங்கள் இருவரும் தான் பைசல் பேசினோம். மேற்படி உழவன் விவசாய சங்கம் உரம் விற்பனை செய்யும் சங்கம் என்றாலும், அதில் பிரதிவாதியும், அவரது மகனும் கடன் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) வாதி எனக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் பணம் கொடுக்க வேண்டும் என்று வாதி என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் இதற்கிடையில் கடந்த 18.06.2020ம் தேதியில் வாதி, நான் ரூ.2,50,000/−மும், பிரதிவாதியின் தகப்பனார் ரூ.3இலட்சமும் தருமாறு கோரி வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான்.

5) மேற்படி வாக்கு மூலத்தில் நான் எந்தவிதமான பதில் அறிவிப்பும் வாதிக்கு அனுப்பவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாமல், பிரதிவாதிக்கும், அவரின் தகப்பனாருக்கும் ஆதராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.07.21 17:38:52 +0530

Sub Judge,
Paramathy